கம்பஹா மாநகர சபை - 2024

----

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கம்பஹா மாநகர சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (252 ஆவது அதிகாரம்) 219 ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உப பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் கம்பஹா மாநகர சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாநகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

	உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	மீளாய்வாண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்றுக்குரிய நியமத் தின் 3 ஆம் அத்தியாயத்தின் 3.32 ஆம் பந்தியின் பிரகாரம் செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான தேறிய காசுப்பாய்ச்சல் கணிப்பிடும் போது கூட்டுமொத்தமாக ரூபா 530,117,268 வழுவொன்று ஏற்பட்டிருந்தது.	எதிர்வரும் ஆண்டில் சீராக்கங்களை மேற் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	காசுப்பாய்ச்சல் கூற்று நியமத்தின் பிரகாரம் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும்.

(ஆ)	நிதிக்கூற்றுக்களில் பரிந்துரை செய்யப்பட்ட படிவத்தின் குறிப்பு இலக்கம் 10 இன் பிரகாரம் மூலதன செலவினப்படி தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்வரும் ஆண்டில் சீராக்கங்களை மேற் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	காசுப்பாய்ச்சல் கூற்று நியமத்தின் பிரகாரம் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும்.

1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	மூலதன மானியம் பிழையாக சீராக்கப்பட்டமை மீளாய்வாண்டின் போது சரிசெய்யப்பட்டிருக்கும் போது மீண்டும் காலக் கழிவாக ரூபா 7,517,053 மூலதன மானியக் கணக்கு வரவுவைத்து திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது.	கணக்கீடு செய்யப்படா திருந்தமையால் சீராக்கப்பட்டுள்ளது.	சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும்.
(ஆ)	ஆதனவரி வழுக்களை சரி செய்தல் ரூபா 1,517,102 மற்றும் வருமானம் பதிவழித்தல் ரூபா 173,925 பிரிவான வருமானக் கூற்றில் சீராக்க வேண்டியிருந்த போதிலும் திரண்ட நிதியத்தில் சீராக்கப்பட்டிருந்தது.	எதிர்வரும் ஆண்டின் போது சரிசெய்யப்படும்.	சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும்.
(இ)	மீளாய்வாண்டின் மிகை ரூபா 4,821,993 திரண்ட நிதியத்தில் சீராக்கப் படாதிருந்ததுடன் சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்றில் திரண்ட மிகையின் கணக்கில் மீதியாக ரூபா 216,609,265 காண்பிப்பதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் மிகையாக ரூபா 4,821,993 காண்பிக்கப்பட்டிருந்தது. சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்றில் தேறிய சொத்துக்களின் பெறுமதி ரூபா 7,491,070,534 காண்பிக்க வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் ஆரம்பத் திகதியில் உள்ளவாறு திரண்ட மிகை கணக்கின் மீதியான ரூபா 211,787,272 காண் பிக்கப்பட்டிருந்தது.	எதிர்வரும் ஆண்டின் போது சரிசெய்யப்படும்.	சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும்.
(ஈ)	விரிவான வருமானக் கூற்றில் ஏனைய விரிவான வருமானத்தின் கீழ் மீளாய்வாண்டிற்காக கிடைக்கப்பெற்ற மூலதன செலவின மானியம் மற்றும் மிகையில் அல்லது பற்றாக்குறையில் இனங்காணப்பட்ட மூலதன செலவினம் மானியம் சரியாக காண்பிக்கப்படாதிருந்த துடன் ஆண்டிற்கான விரிவான வருமானமாக	எதிர்வரும் ஆண்டின் போது சரிசெய்யப்படும்.	சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும்.

	மீளாய்வாண்டின் மிகையான ரூபா 4,821,993 காண்பிக்கப்பட்டிருந்தது.		
(உ)	தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் மிகையில் அல்லது பற்றாக்குறையில் இனங்காணப்படாத மூலன செலவின மானியம் காண்பிக்கப்பட் டிருக்கவில்லை.	எதிர்வரும் ஆண்டின் போது சரிசெய்யப்படும்.	சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும்.

1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
கூட்டுப் பெறுமதி ரூபா 403,746 ஆன 03 கணக்கு விடயங்கள் தொடர்பாக வரி பதிவேடு சமர்ப்பிக்காமை காரணமாக திருப்திகரமாக பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது.	உரிய நிறுவனத்திற்கு அறிவித்து பணத்தை அறவிடுவதற்போது அல்லது பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்படும்.	தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மனங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு	இணங்காமைகள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	1980 இன் 56 ஆம் தேசிய சுற்றாடல் சட்டத்தின் 23(அ) பிரிவு	சுடலைக்கூடம் இரண்டிற்கான அனுமதிப் பத்திரம் பெறப்பட்டிருக்க வில்லை.	நிலத்தின் உரித்தைக் கையேற்று அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சட்டத்தின் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப்பிரமாணம்			
(i)	396(ஆ)	பெறுமதி ரூபா 431,560 ஆன மதிப்பிழந்த காசோலை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை.	அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	571	பெறுமதி ரூபா 38,267,859 ஆன வைப்புக்கள் ஓய்வு	வருமானத்திற்கு இனங்காண்பதற்	நிதிப் பிரமாணத்தின் பிரகாரம்

		பெறச் செய்யப்பட்டிருக்கவில்லை.	கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	உள்ளூராட்சி ஆணையாளரின் இலக்கம் டபிள்யூபி/எல்ஜீடீ/01/ 2012 மற்றும் 2012 யூலை 11 ஆந் திகதிய சுற்றறிக்கையின் (VII) ஆம் பந்தி	திட்டமிடல் குழுவின் கள உத்தியோகத்தர்களின் பரிந்துரை ஒரு வாரத்திற்குள் கையளிக்க வேண்டியிருந்த போதும் 17 இற்கும் 129 நாட்களுக்கும் இடையிலான காலம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 18 கோவைகள் காணப்பட்டது.	எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,821,993 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 111,022,252 ஆகும்.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

நகர ஆணையாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

		2024				2023			
	வருமானமான மூலம்	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை
		ரூபா ‘000	ரூபா ‘000	ரூபா ‘000	ரூபா ‘000	ரூபா ‘000	ரூபா ‘000	ரூபா ‘000	ரூபா ‘000
i.	ஆதன வரியும் வரியும்	89,500	92,183	75,838	106,976	88,502	94,649	89,841	90,631
ii.	வாடகை	40,648	43,933	43,731	38,755	39,570	44,021	39,093	38,554
iii.	அனுமதிப்பத்திரக் கட்டணம்	5,000	5,125	5,298	576	9,800	10,958	11,011	648
iv.	ஏனைய வருமானம்	248,113	80,499	13,381	105,596	200,161	199,146	198,760	35,746
		383,261	221,740	138,248	251,903	338,033	348,774	338,705	165,579

2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப் படுகின்றது.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	**வீதவரியும் வரியும்**		
(i)	நிலுவை ஆதனவரி காலப் பகுப்பாய்வு அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு ரூபா 83,788,502 ஆன நிலுவை மீதியில் 10 வருடங்களுக்கு மேற்பட்ட மீதி ரூபா 17,828,966 உம், 5 இற்கும் 10 வருடங்களுக்கும் இடையிலான மீதி ரூபா 29,639,983 உம், 03 இற்கும் 05 வருடங் களுக்கும் இடையிலான மீதி ரூபா 12,821,764 உம், 01 இற்கும் 03 வருடங் களுக்கும் இடையிலான மீதி ரூபா 13,780,602 உம், 01 வருடத்திற்கு குறைந்த மீதி ரூபா 9,717,187 உம் ஆகும்.	நிலுவையை சேகரிக்கப்படுவ துடன் அசைவுறாத ஆதனங்களை தடைசெய்யும் நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப் படுகின்றது.	நிலுவை ஆதனவரி வருமானம் விரைவாக அறவிடப்படல் வேண்டும்.
(ii)	மீளாய்வாண்டின் சிட்டையிடப்பட்ட ஆதனவரி வருமானம் ரூபா 78,357,087 ஆக இருந்ததுடன் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 45,457,031 ஆனமையால் அறவிடல் சதவீதம் 58 சதவீதமாக காணப் பட்ட போதிலும் மீளாய்வாண்டின் ஆரம்பத் திகதியில் காணப்பட்ட 79,850,570 ஆன நிலுவை ஆதனவரி மீதியில் ஆண்டில் அறவிடப்பட்ட வருமானம் ரூபா 16,594,371 ஆனமையால் அறவிடலின் சதவீதம் 21 சதவீதம் ஆன குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தது.	பிரதான அலுவலகத்தில் அறவிடப்பட்ட சதவீதம் 74 சதவீதம் மற்றும் 34 சதவீதம் ஆகும்.	நிலுவை ஆதனவரி வருமானம் விரைவாக அறவிடப்படல் வேண்டும்.
(iii)	பிழையாக சிட்டையிடல் இனங்காணப்பட்ட 08 ஆதனங்களின் நிலுவை ஆதனவரி மீதி ரூபா 780,403 மற்றும் தடைசெய்யப்பட வேண்டியதாக இனங்காணப்பட்ட 46 அசைவு றாத ஆதனங்கள் மற்றும் 20 அசைவுறும் ஆதனங்களின் நிலுவை ஆதன வரி மீதி ரூபா 1,688,260 இனை தீர்த்து வைப்பதற்கு 2025 மே 29 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டில் ரூபா 212,468 அறவிடப்பட்டதுடன் அசை வுறாத ஆதனங்களை தடை செய்யும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	நிலுவை ஆதனவரி வருமானம் விரைவாக அறவிடப்படல் வேண்டும்.

(iv)	நிலுவை வருமான அறிக்கையின் பிரகாரம் ஆண்டில் சிட்டையிடப்பட்ட விநோத வரி வருமானம் ரூபா 8,453,934 தொகையில் ஆண்டில் அறவிடப்பட்ட வருமானம் ரூபா 4,537,804 ஆனமையால் அறவிடல் வீதம் 54 சதவீதமாகக் காணப்பட்டதுடன் ஆண்டின் ஆரம்பத் திகதியில் உள்ளவாறு நிலுவையாக இருந்த விநோத வரி மீதி ரூபா 9,623,517 தொகையில் ஆண்டில் அறவிடப்பட்ட வருமானம் ரூபா 3,772,400 ஆனமையால் அறவிடப்பட்ட வீதம் 39 சதவீதமான குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தது.	மீளாய்வாண்டில் ஆரம்பத் திகதியில் உள்ளவாறு நிலுவையாக இருந்த விநோத வரி மீதி ரூபா 9,623,517 தொகையில் அறவிடப்பட்ட வருமானம் ரூபா 4,830,356 ஆகும்.	நிலுவை விநோத வரி வருமானம் விரைவாக அறவிடப்படல் வேண்டும்.
(v)	சினிமா மண்டபங்களிலிருந்து அறவிட வேண்டிய நிலுவை விநோத வரி மீதியில் 05 இற்கும் 10 வருடங்களுக்கும் இடையிலான மீதி ரூபா 3,851,349 உம், 03 இற்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான மீதி ரூபா 941,812 உம் காணப்பட்டதுடன் 2017 திசெம்பர் 13 ஆம் திகதி கையளிக்கப் பட்ட 2023 மார்ச் 17 ஆந் திகதிய வழக்குத் தீர்ப்பின் மூலம் அறவிட வேண்டிய நிலுவை விநோத வரியான ரூபா 3,851,349 மற்றும் வட்டி பிரதிவாதிக் கம்பனியினால் செலுத்துவதற்கு வெளியிடப் பட்டிருந்த போதும் தீர்ப்பு வழங்கி 02 வருடங்கள் கடந்திருந்த போதிலும் 2025 மார்ச் 15 ஆந் திகதி வரையிலும் அந்தப் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.	கம்பனி செயலாளரின் முகவரி கண்டறியப்பட்டுள் ளதுடன் மிகுதி நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட் டுள்ளது.	நிலுவை விநோத வரி வருமானம் விரைவாக அறவிடப்படல் வேண்டும்.
(ஆ)	**வாடகை**		
(i)	பிரதான அலுவலகத்திற்குரிய கடைகளில் நிலுவைக் கடை வாடகை காலப் பகுப்பாய்வு அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிலுவை மீதி ரூபா 35,774,230 தொகையில் 05 இற்கும் 10 வருடங்களுக்கும் இடையில் ரூபா 18,638,759 உம், 03 இற்கும் 05 வருடங்களுக்கு இடையில் ரூபா 2,781,353 உம், 01 இற்கும் 03 வருடங்களுக்கும் இடையில் ரூபா 4,938,523 உம், 01 வருடத்திற்கு குறைந்த ரூபா 9,415,594 உம் காணப்பட்டதுடன் யக்கல உப அலுவலகத்திற்குரிய நிலுவைக் கடை வாடகை மீதி ரூபா 2,949,510 ஆகக் காணப்பட்டதுடன் காலப் பகுப்பாய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	பிழையான சிட்டையிடலைப் பதிவழிப்பதற்கும், நிலுவை கடையினைக் கையேற்பதற்கோ அல்லது சட்ட ரீதியான நடவடிக்கைகளோ எடுப்பதற்கு தயார் செய்யப்பட்டுள்ளது.	நிலுவை வியாபார நிலைய வாடகை விரைவாக அறவிடப்படல் வேண்டும்.

(ii)	மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் உள்ளவாறு காணப்பட்ட வாராந்த சந்தை நிலுவை வாடகை ரூபா 1,305,206 தொகையில் எந்தவொரு தொகையும் அறவிடப்பட்டிருக்க வில்லை.	இந்த 2021 ஆம் ஆண்டிற்குரிய நிலுவைத் தொகை அறவிடுவதற்கு சட்ட ரீதியான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.	நிலுவை வாராந்த சந்தை வாடகை அறவிடப்படல் வேண்டும்.
(iii)	மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் உள்ளவாறு காணப்பட்ட இறைச்சிக்கடை கேள்வி வாடகை ரூபா 90,015 தொகையில் எந்தவொரு தொகையும் அறவிடப்பட்டிருக்க வில்லை.	இந்த 2021 ஆம் ஆண்டிற்குரிய நிலுவைத் தொகை அறவிடுவதற்கு சட்ட ரீதியான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.	இறைச்சிக் கடை கேள்வி வாடகை அறவிடப்படல் வேண்டும்.
(இ)	**அனுமதிப்பத்திரக் கட்டணம்**		
(i)	மீளாய்வாண்டின் ஆரம்ப திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 1,157,190 ஆன கைத்தொழில் மற்றும் வியாபார வரி நிலுவை மீதியில் ஆண்டின் போது அறவிடல் ரூபா 139,675 ஆனமையால் அறவிடப்பட்ட வருமானம் 12 சதவீதம் ஆன குறைந்த சதவீதத்தைக் கொண்டிருந் தது.	நிலுவை மீதிக்காக வழக்குத் தொடரப் பட்ட போது வியாபார உரிமையாளர்கள் வியாபார நிலையங்கள் மறறும் குடியிருப்பில் இருந்து விலகிச் சென்றமையினால் வழக்கு நடவடிக்கை கள் தாமதமடைந்துள்ளது.	கைத்தொழில் மற்றும் வியாபார வரி நிலுவை மீதி அறவிடப்படல் வேண்டும்.
(ii)	மாநகர சபையால் நடாத்திச் செல்லப்பட்ட கம்பஹா விருந்தினர் விடுதி நிர்வாகம் 1980 செப்டெம்பர் 09 ஆம் திகதிய இலக்கம் 105/3 என்ற வர்த்தமானியின் மூலம் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் ஆரம்பத் திகதியில் உள்ளவாறு நிலுவை விருந்தினர் விடுதி வாடகை மீதி ரூபா 8,682,804 மற்றும் மீளாய்வாண்டில் சிட்டை யிடப்பட்ட பெறுமதி ரூபா 1,250,539 ஆக இருந்த போதும் எந்தவொரு தொகையும் அறவிடப்படாதிருந்ததுடன் அறவிடுவதற்காக மாநகர சபையால் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இந்த நிலுவையை அறவிடுவதற்காக சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.	விருந்தினர் விடுதிக் கட்டணம் அறவிடப்படல் வேண்டும்.

(ஈ) ஏனைய வருமானம்

(i)	வாகனத் தரிப்பிட நிலுவைக் கட்டணம் ரூபா 2,147,954 தொகையில் 01 இற்கும் 05 இற்கும் இடையே 05 இடங்களுக்குரிய ரூபா 624,303 தொகையும், 05 இற்கும் 10 வருடங்களுக்கும் இடையில் 04 இடங்களுக்குரிய ரூபா 1,523,651 தொகையும் காணப்பட்டது.	நிலுவைக் கட்டணம் ரூபா 2,147,954 அறவிட வேண்டி யுள்ளது.	வாகனம் தரித்து வைத்தல் நிலுவைக் கட்டணம் அறவிடப்படல் வேண்டும்.
(ii)	வாகன தரிப்பிட இடங்களை வாடகைக்கு வழங்குதல் தொடர்பாக ரூபா 532,072 அறவிடுவதற்கு 2022 மே 20 ஆம் திகதி 02 வழக்குகள் தொடரப்பட்ட போதிலும் நடுக்கட்டல் பகிர்ந்தளிப்பதற்காக நீதிமன்றத்திற்கு சரியான முகவரி சமர்ப்பிப் பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	சரியான முகவரி சமர்ப்பிக்குமாறு நீதி மன்றத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.	நிலுவை வாகன தரிப்பிடல் கட்டணம் அறவிடப்படல் வேண்டும்.
(iii)	06 வியாபார தொகுதிகளுக்குரிய 29 கடைகளில் இருந்து 2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட நிலுவை முற்பண மீதி ரூபா 30,155,344 அறவிடப்படாதிருந்த துடன் இதில் 01 இற்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான கடையில் ரூபா 433,287 தொகையும், 05 இற்கும் 10 வருடங்களுக்கும் இடையில் 08 கடைகளில் ரூபா 10,106,294 தொகையும், 10 இற்கும் 15 வருடங்களுக்கும் இடையில் 07 கடைகளில் இருந்து ரூபா 8,960,721 தொகையும், 10 வருடங்களுக்கு மேற்பட்ட கடையொன்றில் இருந்து ரூபா 784,884 தொகையும், நிலுவையாக காணப்பட்ட காலம் இனங்காண முடியாத 11 கடைகளில் இருந்து ரூபா 9,870,158 தொகையும் அறவிடுவதற்காக சட்ட ரீதியான நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட் டிருக்கவில்லை	சபைக்கு கையேற்று நிலுவை முற்பணத்தை பதிவழிப்பதற்கு சபை அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	நிலுவை முற்பணத்தை அறவிடப்படல் வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	கிடைக்கப்பெற்ற 111 பொது மக்கள் முறைப்பாடுகளுக்கிடையே 32 இற்கு மாத்திரம் தீர்வு வழங்கப்பட்டிருந்தது.	மிகுதி முறைப்பாடுகள் விசாரணை செய்யப் படுகின்றது.	பொது மக்கள் முறைப்பாடுகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	வியாபார கொட்டகை நிர்மாணத்திற்காக 2022 நவம்பர் 18 ஆந் திகதி 03 மாதங்களில் நிறைவேற்றுவதற்கு உடன்படிக்கை செய்து 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் ரூபா 1,876,479 ஆன 24 பணிகள் 2025 மே 19 கணக்காய்வுத் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்படாமையின் காரணமாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 2,104,014 இடைக் காலக் கொடுப்பனவு சிக்கனமற்ற செலவினத்திற்கு உட்பட்டிருந்தது.	கேள்விதாரர்கள் முன்வராமையின் காரணமாக சபையின் மூலம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	மிகுதி வேலைகளைப் பூர்த்தி செய்து கட்டிடத்தை இலக்கிடப்பட்ட பணிகளுக்காக பயன்படுத்துதல் வேண்டும்.

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	வீதி அபிவிருத்தி அதிகார சபையால் யக்கல உப அலுவலகத்தின் நிலப் பகுதி ஒன்று கைப்பெற்றிக் கொள்ளல் தொடரப் பட்ட 2022 ஒக்டோபர் 17 ஆம் திகதிய வழக்கிற்கு உரிய ரூபா 4,624,000 இழப்பீடு மற்றும் வட்டித் தொகை சபைக்கு வழங்குமாறு 2024 திசெம்பர் 12 ஆந் திகதி மாவட்ட நீதிமன்றத்தில் கட்டளை இடப்பட்டி ருந்த போதிலும் அந்தத் தொகை 2025 மே 15 ஆம் திகதி வரையிலும் பெறப்பட்டிருக்க வில்லை.	இந்த தொகையை விரைவாக விடுவிக்குமாறு மாவட்ட நீதிமன்ற அலுவலகத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.	உரிய இழப்பீட்டுப் பணம் அறவிடப்படல் வேண்டும்.
(ஆ)	பெக்கோ இயந்திரம் ஹைட்ரோலிக் தாங்கி யில் டீசல் இட்டமையினால் அவசர சேவை நடவடிக்கைகளுக்கு அனுப்புவதற்காக செலுத்தப்பட்ட நிதி மற்றும் டீசல் லீட்டர் 56.32 இற்காக ஏற்பட்ட செலவினம் ரூபா 259,258 தொடர்பாக மாநகர சபை நிதி நிருவாகத்திற்குரிய கணக்கு நடவடிக்கை கள் தொடர்பான கட்டளை 13 முதல் 16 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதி நிர்வாகத்திற்குரிய கணக்கு நடவடிக்கைகள் தொடர்பான கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(இ)	மயான நிலங்களை அளவிடுவதற்கு ரூபா 691,410 செலவினம் ஒன்றை மேற்கொண்டு நில வரைபடம் விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும் எல்லை அடையாளம் இடாமை யின் காரணமாக செலவினங்கள் பயனற்ற தாகி இருந்தது.	விபரங்களை வழங்குமாறு தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	எல்லை அடையாளம் இடப்பட்டு சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட ல் வேண்டும்.

3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	கடைகளை உடைத்து அகற்றுவதற்கு முன் நிலுவைக் கடை வாடகை அறவிட வேண்டியிருந்த போதிலும் கடை அகற்றப் பட்ட பொதுச் சந்தையில் 142 கடைகளின் நிலுவைக் கடை வாடகை மீதி ரூபா 2,125,775 ஆகக் காணப்பட்டது.	2025 மே 28 ஆம் திகதி வரையில் ரூபா 1,005,088 பதிவழிப்பதற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் ரூபா 1,449,023 தொகை அறவிடப் பட்டுள்ளது.	நிலுவைக் கடை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	உடன்படிக்கையின்றி வழங்கப்பட்டு நடாத்திச் செல்லப்படுகின்ற மற்றும் 2020 இன் வருடாந்த மதிப்பீட்டின் பிரகாரம் மாதாந்த வாடகை ரூபா 7,750 மற்றும் ரூபா 7,000 ஆன 05 கடைகளில் இருந்து கடை வாடகை வருமானத்தை இனங் காண்பதற்கும், அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	மிகுதி நடவடிக்கை களுக்காக குழு தீர்மானம் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	வருமானமாக இனங்காண்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	மாநகர சபைக்குரிய 08 கடைகளின் கடை உரிமையாளர்களின் பெயரில் காணப்படு கின்ற நிலுவைக் கடை வாடகைப் பெறுமதி ரூபா 124,400 ஆன ஹோட்டல் தொடர்பாக உடன்படிக்கை செய்யப்படாதிருந்தமையும், கடை மதிப்பீடு 2023 யூலை 15 ஆந் திகதி முடிவடைய வேண்டியிருந்த போதிலும் அங்கீகாரமின்றி 08 கடைகளின் சுவர் அகற்றப்பட்டு முன்னால் பிரயாணத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த 05 அடி அகலத்தில் கொரிடோ கண்ணாடிகளை மேவுகை செய்து ஹோட்டலுடன் தொடர்புபடுத்தப்பட் டிருந்த மையும் அங்கீகாரமின்றி 2024 ஆம் ஆண்டின் போதும் மறுசீரமைக்கப்பட்டிருந் தமையும் ஹோட்டலின் பின் பக்கத்தில் காணப்பட்ட மாவத்த மற்றும் அடி 15 அளவான அகலத்தையுடைய நீர் வழிந் தோடும் வடிகாண் முறைமையில் வாய்க் கதவிட்டு உள் நுழைவதற்கு முடியாத வகையில் மேவுகை செய்து அனுமதியற்ற நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் மாநகர சபையால் இது தொடர்பாக எந்தவொரு நடவடிக்கை யும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுக்கப்படுவதுடன் மதிப்பீட்டுக்காக மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	மதிப்பீடு மேற் கொண்டு முறையான பிகாரம் உடன் செய்ய வேண்டி யிருந்ததுடன் அனுமதியற்ற நிர்மாணங்கள் அகற்றப்படல் வேண்டும்.

3.4 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	பெறுமதி ரூபா 666,135 ஆன 14 சீருடை விடயங்களை பகிர்ந்தளிப்பதற்கு 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பாதிருந்ததுடன் இதில் ரூபா 250,825 ஆன 07 விடயங்கள் 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தில் இருந்தும், பெறுமதி ரூபா 96,350 ஆன 02 விடயங்கள் 2020 ஆம் ஆண்டில் இருந்தும், பெறுமதி ரூபா 318,960 ஆன 05 விடயங்கள் 2023 ஆம் ஆண்டில் இருந்தும் கொண்டுவரப்படுகின்றது.	குழுவொன்று நியமித்து ஏலத்தில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	இலக்கிடப்பட்ட பணிகளுக்காக பயன்படுத்துவதற்கோ அல்லது முறையான பிகாரம் ஏலத்தில் விற்பனை செய்வதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 188(1) பிரிவிற்கு முரணாக சபை நிதியத்தில் இருந்து ரூபா 854,400 செலவில் 2023 பெப்ரவரி 14 ஆந் திகதி 96 சேலைகள் கொள்வனவு செய்யப்பட்டு 48 சேலைகள் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டதுடன் ரூபா 427,200 ஆன எஞ்சியிருந்த 48 சாரிகள் 2025 மே 18 ஆந் திகதி வரையிலும் களஞ்சியப்படுத் தப்பட்டிருந்தது.	குழுவொன்று நியமித்து ஏலத்தில் விற்பனை செய்வதற்கும் பணத்தை அறவிடுவதற்கும் பரிசோதனை ஒன்று நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	சட்டத்திற்கு முரணாக நடவடிக்கை எடுத்தமையால் பொறுப்வாய்ந்தவரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	கீழ் தளத்தின் வேலைகள் முடிந்த பின்னர் மேல் தளம், கம்பங்களால் சுவர் அரைவாசி கட்டப்பட்டு சன சமூக மண்டபத்தின் சில பழுதடைந்தமையினால் நிறம் கழன்று இருந்ததுடன் மேற்கூறப்பட்ட மேல் மாடியை நிர்மாணிப்பதற்கு உரிய கோவை சமர்ப்பிக்கப்படாதிருந்தமையால் பயனற்ற செலவினத்தை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.	செயற்திட்டத்திற்காக நிதி ஏற்பாடுகளை ஒதுக்கிக் கொள்வதற்கு மதிப்பீடு தயாரிக்கப் பட்டுள்ளது.	சொத்துக்களை பயன்படுத்தக் கூடிய முறையில் பூர்த்தி செய்தல் வேண்டும்.
(ஈ)	தீயணைப்பு பிரிவில் ஊழியர் ஒருவருக்கு தங்குமிட வசதி வழங்குவதற்காக 02 ஆம் மாடியில் திட்டமிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட தனி வீட்டுக் கட்டிடத்தின் சுவர் வெடித்து, சிலப் கீழ் இறங்கி இருந்ததுடன் நிர்மாணித்தல் செயற்திட்டத்திற்குரிய கோவை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	இந்த நிர்மாணத்திற்காக எந்தவொரு கொடுப்பனவும் மேற் கொள்ளப்படவில்லை . கோவையினைத் தேடுவதற்காக ஆவணக்கூடத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.	சொத்துக்கள் சரியான பிரகாரம் பராமரிக்கப்படல் வேண்டும்.

3.5 மனித வள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை 02 ஆக இருந்த போதும் 09 பேர் மிகையாகக் காணப்பட்டதுடன் பிரதி நகர ஆணையாளர் பதவியும், கணக்காளர்களில் 02 பதவிகளும், சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் பதவி ஒன்றும் வெற்றிடமா கக் காணப்பட்டது.	2002 ஆம் ஆண்டின் போது மாநகர சபையாக வெளியி டப்பட்டிருந்த போதிலும் பதவி யணியினர் அதிகரிக் கப்படவில்லை.	வெற்றிடங்களை நிரப்புதல் வேண்டும்.
(ஆ)	சேவையை விட்டுச் சென்ற, ஓய்வு பெற்றுச் சென்ற, மின்சார சபைக்கு நியமிக்கப்பட்டி ருந்தது 40 உத்தியோகத்தர்களின் ரூபா 1,279,322 கடன் மற்றும் முற்பண மீத அறவிட வேண்டியிருந்தது.	அறவிடுவதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும்.	ஊழியர் கடன் அறவிடப்படல் வேண்டும்.

3.6 வாகன பயன்பாடு

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	ஓட்டத்தில் இருந்து அகற்றப்பட்ட வான் வண்டி பழுதுபார்ப்பதற்காக இயந்திர உத்தியோகத்தர், தொழில்நுட்ப உத்தியோ கத்தர் பரிந்துரையின்றி 2024 மே 08 ஆந் திகதி 05 நிறுவனங்களில் இருந்து கூறுவிலை கோரப்பட்டதுடன் 2025 பெப்ரவரி 24 ஆம் திகதி வரையிலும் வாகனத்தைப் பழுதுபார்த்து ஓட்டத்தில் ஈடுபடுத்தியிருக்கவில்லை.	2024 மே 08 ஆந் திகதி இயந்திரப் பொறியியலாளரின் பரிந்துரையின்றி கூறுவிலை கோரப் பட்டமையால் பரிந்துரையுடன் மீண்டும் ஒரு தடவை கூறுவிலை கோரப்பட்டுள்ளது.	சொத்துக்கள் உரிய பிரகாரம் பராமரிக்கப்படல் வேண்டும்.
(ஆ)	தீயணைப்பு வண்டியைப் பழுதுபார்ப்ப தற்காக உள்நாட்டு முகவர் நிறவனத்தில் கிடைக்கப்பெற்ற ரூபா 6,250,000 மதிப்பீட்டிற்காக பிரதான இயந்திரப் பொறியியலாளரால் அங்கீகாரம் கிடைத்தி ருந்த போதிலும் 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் பழுதுபார்ப்பதற்காக அனுப்பப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.	சொத்துக்கள் உரிய பிரகாரம் பராமரிக்கப்படல் வேண்டும்.

3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	உரித்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான நில வரைபடம் மற்றும் உரித்துறுதி சபையிடம் காணப்படாதிருந்த சதுர அடி 249 ஆன கம்பஹா நகர சபைக்கு அருகில் அமைந்துள்ள பொதுக் கிணறு 2024 இன் வருடாந்த சொத்துக்கள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் சபைக்குரியதாக இனங்காணப்பட்டிருந்த போதிலும் கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை.	இந்த நிலம் சபைக்குச் சொந்தமாக இருந்த போதிலும் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் வீதிகள் விரிவு படுத்தி அபிவிருத்தி செய்வதற்காக இந்த வீதி பயன்படுத் தப்பட்ட போதும் அந்த நிறுவனத் திற்கு கையளிக்கப் படவில்லை.	சொத்துக்களின் உரித்தை மற்றும் பாதுகாப்பு உறுதிப் படுத்தப்படல் வேண்டும்.
(ஆ)	உரித்தை உறுதிப்படுத்திக் கொள்வ தற்காக நில வரைபடம் மாத்திரம் சபையிடம் காணப்பட்ட கிணறு கணக்கீடு செய்யப்படாதிருக்கும் போது 2024 இன் வருடாந்த சொத்துக்கள் மெய் ஆய்வில் இனங்காணப்பட்டிருந்ததுடன் இந்த இடத்தில் கிணறொன்று காணப்படாதிருந்த துடன் 02 பேர்ச் அளவிலான நில அளவு காணப்பட்டது.	கழிவுப் பொருட்களை அகற்றி எல்லை வேலி அமைக்கப் பட்டுள்ளது.	சொத்துக்கள் சரியாக வகைப் படுத்தப்பட்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.
(இ)	உரித்தை உறுதிப்படுத்திக் கொள்வ தற்காக நில வரைபடம் மற்றும் உரித்துறுதி சபையிடம் காணப்பட்டாதிருந்த பொது வசதிகள் காணி கணக்கீடு செய்யப் படாதிருந்த போதும் 2024 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் படி 48.7 பேர்ச் ஆக புதிதாக இனங்காணப்பட்டதுடன் எல்லையினை இனங்காண்பதற்கு முடியாத பிரகாரம் காடு வளர்ந்து இருந்தது.	எதர்காலத்தில் தீர்த்து வைக்கப்படும்.	சொத்துக்களின் உரித்து மற்றும் பாதுகாப்பு உறுதிப் படுத்தப்படல் வேண்டும்.
(ஈ)	நிலையான சொத்துக்கள் மெய்மையாய்வு சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த இனங் காணப்பட்ட 41 காணிகளுக்கிடையே 04 ஏக்கர் 03 றூட் 29.4 பேர்ச் அளவான 06 காணிகளுக்கு நில வரைபடம் மற்றும் உரித்துறுதியும், 03 ஏக்கர் 01 றூட் 17.19 பேர்ச் அளவான 07 காணிகளுக்குரிய நில வரைபடம், 06 றூட் 4.5 பேர்ச் அளவான 04 காணிகளுக்குரிய உரித்துறுதியும் காணப்படாதிருந்ததுடன் உரிய நில வரைபடம் மற்றும் உரித்துறுதி தயாரித்துக் கொள்வதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	எதர்காலத்தில் தீர்த்து வைக்கப்படும்.	பொருள் மெய்மையாய்வு சபையின் பரிந்துரையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(உ)	மெய்மையாய்வு சபையினால் புதிதாக இனங்காணப்பட்ட 15 காணிகளுக்குரிய நில வரைபடம் மற்றும் உரித்துறுதி சபையிடம் காணப்படாதிருந்ததுடன் உரித்தை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் கையேற்கப்பட்டவுடன் வேலி எல்லை அமைத்து பேர் பதாதை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென பரிந்துரை செய்யப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டி ருக்கவில்லை. இதில் 08 காணிகளின் நில அளவும் இனங்காணப்பட்டிருக்க வில்லை.	பாதுகாப்பு வேலை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சொத்துக்கள் மெய்மை ஆய்வு சபையின் பரிந்துரையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஊ)	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சொத்துக்கள் மெய்மையாய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த டெக்டெர், கல் உருளை, முச்சக்கர வண்டி, உடைந்த டேலர், நீர் பௌஸர் டேலர் மற்றும் கழிவுப் பொருள் வகைப் படுத்தல் டேலர் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இது தொடர்பாக எதிர்காலத்தில் கண்டறிந்து நடவடிக்கை எடுக்கப்படும்.	சொத்துக்கள் மெய்மை ஆய்வு சபையின் பரிந்து ரையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(எ)	சமூக சபைகளின் கட்டிடம் காணப்பட்ட போதும் சமூக சபைகளுக்காக வழங்கப் பட்ட சில பொருட்கள் உறுப்பினர்களின் மற்றும் சமூக சபை உத்தியோகத்தர்களின் வீடுகளில் காணப்பட்டிருந்தமையும் 06 சமூக சபைகளில் கையுடனான 300 பிளாஸ்ரிக் கதிரைகளில் 121, LG-HIFF System 02 கெனபி ஹட் 02 மற்றும் புபே செட் 02 பற்றாக்குறையாகக் காணப்பட்ட மை அவதானிக்கப்பட்டது.	இது தொடர்பாக எதிர்காலத்தில் ஆராய்து நடவடிக்கை எடுக்கப்படும்.	சொத்துக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஏ)	2025 மே 19 ஆம் திகதி வரையிலும் 2024 ஆம் ஆண்டின் சொத்துக்கள் மெய்மை ஆய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட பொதுக் கிணறுகள் 03 இனது நிலத்தை இனங்காண முடியாதிருந்தமை, 07 பொதுக் கிணறுகளில் காடுகள் வளர்ந்து இருந்தமையால் அளவிடல் நடவடிக்கை களை மேற்கொள்ள முடியாதிருந்தமை, 02 கிணறுகளில் கழிவு நீர் வழிந்தோடும் வடி காண் முறைமை காணப்படாமை, கிருவள முள்ள பொதுக் கிணறு மூடப்பட்டு கழிவுப் பொருட்கள் குவிக்கப்பட்டமை தொடர்பாக பரிந்துரையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இது தொடர்பாக எதிர்காலத்தில் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும்.	சொத்துக்கள் மெய்மை ஆய்வு சபையின் பரிந்துரையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஐ)	02 ஏக்கர் 17 பேர்ச் அளவான மாநகர சபை விளையாட்டு மைதானத்தைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள வலை வேலி விழுந்து	இது தொடர்பாக தற்போது வரையில் எடுக்க வேண்டிய	வலை வேலி அமைப்பதற்கு நடவடிக்கை

	அருகிலுள்ள காணிகளின் மரங்களில் சாய்ந்திருந்தது. விளையாட்டு மைதானம் இன்றிய அருகில் உள்ள பாடசாலை சில வற்றுக்கு விளையாட்டு மைதானமாக இதனை பயன்படுத்தப்படுவதுடன் வெளி நிறுவனம் மற்றும் நபர்கள் வணிக ரீதியான நடவடிக்கைகளை பெற்றுக்கொள்வதால் மாநகர சபை 2024 ஆம் ஆண்டில் ரூபா 1,382,000 வருமானம் பெற்றிருந்தமையால் வலை வேலி அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது.	நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் ஊழியர்களின் பங்குபற்றலுடன் நிலம் சுத்தம் செய்யப்பட்டுள்ளது.	எடுத்தல் வேண்டும்.
(ஒ)	கம்பஹா மாநகர சபைக்குச் சொந்தமான 02 பேர்ச் காணியைச் சுற்றி வேலி அமைத்து வாய்க் கதவு இட்டு வீடொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அதில் வாகனம் நிறுத்தும் வாகனத் தரிப்பிடமொன்று பேணிச் செல்லப்பட்ட போதும் மாநகர சபை அது தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காதிருந்தமையும் 2024 இன் வருடாந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் அந்தக் காணியின் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	இந்தக் காணியைச் சுற்று எல்லை வேலி அமைப்பதற்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் எதிர்வரும் ஆண்டின் போது கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சொத்துக்களை சரியாக இனங்கண்டு பாதுகாப்பை உறுதிப்படுத்தி கணக்கீடு செய்தல் வேண்டும்.
(ஓ)	கம்பஹா நகர மத்தியில் அமைந்துள்ள 15 பேர்ஜ் அளவான காணியில் அமைந்துள்ள பெறுமதி ரூபா 6,000,000 ஆன சன சமூக மண்டபம் மின்சார வசதிகள் எந்தவொரு சமூக நடவடிக்கைகளுக்காகவும் பயன்படுத்தப்படாதிருந்தமையும் பௌதீக பரிசோதனையின் போது சன சமூக மண்டபத்தில் அனுமதியற்ற வகையில் நபர்கள் குடியிருந்து வருகின்றமையும் அவதானிக்கப்பட்டது. எனினும் மாநகர சபை இது தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.	கட்டிடத்தைப் பழுதுபார்க்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு அனுமதியற்ற குடியிருப்பாளர்களை அகற்றுமாறு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
(ஔ)	பெறுமதி ரூபா 3,965,000 ஆன மாநகர சபை விளையாட்டு மைதானத்தில் கேட்போர் கூடத்தில் 04 அறைகளில் 03 அறைகள் வெளித்தரப்பினரால் அனுமதியற்ற வகையில் உடற்பயிற்சி உபகரணங்கள் மற்றும் ஏனைய உபகரணங்களை வைத்து மூடி சாவியும் அந்தத் தரப்பினரால் எடுத்துச் செல்லப்பட்டி ருந்தது. இந்த அறைகளுக்குரிய மின்சாரப் பட்டியல் மற்றும் நீர்ப் பட்டியல் மாநகர சபையால் செலுத்தப்பட்டிருந்த போதும் அந்தக் கடைகளின் நிருவாகம் மாநகர சபைக்கு புறம்பாக இருந்தது.	எதிர்காலத்தில் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

(க)	பண்டாரவத்த த பினான்ஸ் கம்பனி இனங்காண முடியாதிருந்தது.	எதிர்காலத்தில் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
(கா)	பெறுமதி ரூபா 13,500,000 மற்றும் 45 பேர்ச் அளவான பதுவத்துகொட மயான நிலத்தின் மேற்பகுதியின் எல்லை வேலி அமைத்து காணியின் மண் வெட்டியதன் காரணமாக மயான நிலத்தின் எல்லையை கழுவிச் சென்று சேதத்திற்கு உட்பட்டு கம்பி வேலி இடப்பட்டிருந்த கொங்கிறீட் தூண் கீழ் இறங்கியிருந்தமை அவதானிக் கப்பட்டது.	பாதுகாப்பு வேலியை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
(கி)	பெறுமதி ரூபா 24,000,000 ஆன பகல வீதி வத்த மயான நிலத்திற்கு எல்லையில் சுவறொன்று (blinding wall) இட்டு கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டதுடன் அந்தக் கட்டிடத்தில் மழை நீர் மற்றும் கழிவு நீர் இரு பக்கமும் அகற்றுவதற்காக இடப்பட்டிருந்தமை தொடர்பாக மாநகர சபை எந்தவொரு நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.	இது தொடர்பாக தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும்.	சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

3.8 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
சன சமூக மண்டபத்தின் மேல் மாடியில் அபிவிருத்தி செய்தல் தொடர்பான அளவிடை மற்றும் கொடுப்பனவு அறிக்கைகளின் அளவு '7-0', '3-0' என்ற 02 கதவுகள் மற்றும் அளவு '5-0'இ '8-4' என்ற கதவு இந்தக் கட்டிடத்தில் பொருத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் பௌதீக பரிசோதனையின் போது ''4-10'', 8-4'' கதவு இரண்டில் ஒரு கதவு மாத்திரம் பொருத்தப்பட்டு ரூபா 227,007 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தமையும் அளவிடல் அறிக்கையில் குறிப்பிடப்படாத தனி கதவு நிலையுடன் கதவொன்று பொருத்தப்பட்டிருந்தமையும் சனசமூக மண்டபத்திற்கான கொடுப்பனவு அறிக்கை மற்றும் அளவிடல் அறிக்கைகள் குறிப்பிடப்பட்ட வியாபார பெயருக்கு முரணமாக சுவர்களில் 04 மின் விசிறிகள் பொருத்தப்பட்டிருந்தயும் அவதானிக் கப்பட்டது.	ஒப்பந்தம் வழங்கப்பட்ட சங்கத்தில் ரூபா 109,893 அறவிடுவதற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் ஒதுக்கப்பட்டுள்ள தொகையில் Wall Mounted Fan பொருத்தப்பட்டிருந்த போதும் தவறொன்றினால் பட்டியலில் குறிப்பிடப்படவில்லை.	மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை மேற் கொள்வதற்கும் மேலதிகமாக செலுத்தப்பட்டவைகளை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.